©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 5.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 221A] சென்னை, செவ்வாய்கிழமை, ஜூலை 11, 2017
ஆனி 27, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

பொருளடக்கம்

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

| சட்டமுன்வடிவுகள்:— | பக்கங்கள் |
|---|---|
| எண் 31/2017—தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் .. .. | 2–4 |
| எண் 32/2017—தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் | 5–7 |
| எண் 33/2017—தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (மூன்றாம் திருத்த)ச் சட்டம் .. .. | 8–9 |
| எண் 34/2017—தமிழ்ப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் .. .. .. | 10–13 |

2017–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 11–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2017.**

***2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்தெட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப் பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வரும்.

11ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11–ம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– தமிழ்நாடு சட்டம் 21/2012.

“(2). (1)ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக் குழு,–

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவர், உச்ச நீதிமன்றத்தின் அல்லது உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை,

(ii) மேலாண்மைக் குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை,

(iii) கல்வி அலுவல் குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை கொண்டது ஆகும்.

**விளக்கம்.–** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, “ சிறந்த கல்வியாளர்” என்பது,-

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணை வேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள, அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் அனுபவம் பெற்றுள்ள புகழ்பெற்ற கல்வியாளராக இருக்கிற, அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை** : ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக் கழகத்துடன் அல்லது பல்கலைகக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2–A) துணை வேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்-உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், மற்றும் கல்வி அமைப்பு மூலமாக பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராகவும் மற்றும் (1)ஆம் உட்விரிவில் வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதிகளையும் கூட கொண்டிருப்பார்.

(2–B) வேந்தரால், மேலாண்மை குழுவால் மற்றும் கல்வி அலுவல் குழுவால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணை வேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக் கூடிய நாளுக்கு முன்பு ஆறு மாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணை வேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக் கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

**(2–C)** துணை வேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணை வேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக் கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

**(2–D)** அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். அந்தக்குழு மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர், அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புதவற்கு மேலும் கால அவகாசம் வழங்கலாம் அல்லது **(2)** ஆம் உட்பிரிவிற்கிணங்க மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கலாம். ".

**நோக்க – காரண விளக்கவுரை**

தற்போது, 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 21/2012), தேர்வுக் குழு உறுப்பினர்களுக்கு தகுதி எதுவும் வகுத்துரைக்கப்படவில்லை. மேலும், துணை வேந்தரை நியமிப்பதற்காகவும் துணை வேந்தராக நியமனம் செய்வதற்காக தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலை தயாரிப்பதற்காகவும் கால வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே, மேற்சொன்ன நோக்கங்களுக்காக குறிப்பிட்ட வகைமுறைகளைச் செய்யும் பொருட்டு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 21/2012 என்ற சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**D. ஜெயக்குமார்,**
*மீன்வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும்*
*நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

2017–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 11–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2017.**

1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன் வடிவு.

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வரும்.

தமிழ்நாடு சட்டம் 43/1997 2. 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12–ஆம் பிரிவில் (2)–ஆம் உட்பிரிவுக்கு பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும்:– 12ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(2) (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு—

(i) அரசால் நியமிக்கப்படுபவரும் உச்ச நீதிமன்றத்தின் அல்லது உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை;

(ii) கல்விசார் ஆட்சிப் பேரவையினால் நியமிக்கப்படுபவரும் சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை; மற்றும்

(iii) ஆட்சிமன்றக்குழுவினால் நியமிக்கப்படுபவரும் சிறந்த கல்வியாளருமான ஒருவரைக் கொண்டதாகும்.

**விளக்கம்.—** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, "சிறந்த கல்வியாளர்" என்பவர்,—

(i) மைய அரசால் அல்லது மாநில அரசால் நிறுவப்பட்ட ஏதேனும் சட்டப் பல்கலைக்கழகத்தின் அல்லது தேசிய சட்டப் பள்ளியின் துணை வேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) சட்டப் பல்கலைக்கழகம் அல்லது தேசிய சட்டப் பள்ளி எதிலும் அல்லது இரண்டிலும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள சிறந்த கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) சட்டப் பல்கலைக்கழகம் அல்லது தேசிய சட்டப் பள்ளி எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை :** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2–அ) துணை வேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்படும் நபர்—

(i) உயர்ந்த அளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய சிறந்த கல்வியாளராக இருக்க வேண்டும்;

(ii) வேந்தருடன் கலந்தாலோசித்து *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் ஆணையின் மூலம் மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டவராக இருக்க வேண்டும்.

(2–ஆ) அரசால், கல்விசார் ஆட்சிப் பேரவையினால் மற்றும் ஆட்சிமன்றக்குழுவினால் அக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணை வேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு தொடங்குதல் வேண்டும் மற்றும் துணை வேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு நான்கு மாதங்களுக்கு முன்பு முடிவடைதல் வேண்டும்.

(2–இ) துணை வேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர் பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணை வேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு குறைந்தது நான்கு மாதங்களுக்கு முன்பு தொடங்குதல் வேண்டும்.

(2–ஈ) அந்தக் குழு, தன்னுடைய பரிந்துரையை அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்கு அனுப்புதல் வேண்டும். அந்தக்குழு, மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாது இருக்குமானால், வேந்தர், அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கு இணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கலாம்.''.

காப்புரைகள்.

தமிழ்நாடு சட்டம் 43/1997.

தமிழ்நாடு சட்டம் 43/1997.

3. 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட அல்லது புகுத்தீடு செய்யப்பட்டவாறான, 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12–ஆம் பிரிவின் (2), (2–அ), (2–ஆ), (2–இ) மற்றும் (2–ஈ)–ஆம் உட்பிரிவுகளில் அடங்கியுள்ள எதுவும், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் இயற்றப்படுவதற்கு உடன் முன்னதாக, 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின் படி அமைக்கப்பட்ட குழுவிற்கு பொருந்துதல் ஆகாது.

**நோக்க—காரண விளக்கவுரை.**

தற்போது **1996**—ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் **43/1997**) தேர்வுக் குழு உறுப்பினர்களுக்கும் துணை வேந்தருக்கும் தகுதிப்பாடு எதுவும் வகுத்துரைக்கப்படவில்லை. மேலும், துணை வேந்தராக அமர்த்துவதற்கு தகுதி வாய்ந்த நபர்களின் பெயர் பட்டியலை தயாரிப்பதற்காகவும் மற்றும் துணை வேந்தரை அமர்த்துவதற்காக தேர்வுக் குழுவால் வேந்தருக்கு பரிந்துரை செய்வதற்கும் கால வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே, மேற்சொன்ன நோக்கங்களுக்காக குறிப்பான வகைமுறைகளைச் செய்யும் பொருட்டு, மேற்சொன்ன, தமிழ்நாடு சட்டத்தைத் தகுந்த முறையில் திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

**2.** இந்தச் சட்ட முன் வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. சண்முகம்,**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

2017–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 11–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2017.**

***2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (மூன்றாம் திருத்த) சட்டம் என அழைக்கப்பெறும்.

(2) இது 2017–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 9–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

இரண்டாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 32/2008.

2. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் இரண்டாம் இணைப்புப் பட்டியலில், வரிசை எண் 5–இல், இனம் (ii) மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்கு பின்னர், பின்வரும் இனம் மற்றும் பதிவுகள், முறையே, சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :—

| | | | |
|---|---|---|---|
| "(iii) மாநிலத்தில் மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின் [Regional Connectivity Scheme (RCS)] கீழ் வரும் விமான நிலையங்களில், மத்திய அரசின் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட "மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தில் (RCS-UDAN)" வரையறுக்கப்பட்டவாறான RCS விமானங்களை இயக்கும் வானூர்தி தடங்கள் இயக்குபவர்களுக்கு விற்பனை செய்யப்படும் வானூர்தி விசை எரிபொருள். | இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில். | 1 | விழுக்காடு.". |

**நோக்க—காரண விளக்கவுரை**

மத்திய அரசின் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம், நிதி உதவி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு மூலம் மண்டலங்களுக்குள் விமான இணைப்பினை அதிகப்படுத்துவதற்கு தேசிய சிவில் விமான போக்குவரத்து கொள்கை 2016—ன் கீழ் மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தினை (Regional Connectivity Scheme-UDAN) துவக்கியுள்ளது. தமிழ்நாட்டில் மேற்சொன்ன திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக, மத்திய அரசின் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) ஒன்று 8.6.2017 அன்று கையெழுத்தானது. மேற்சொன்ன திட்டத்தின் கீழ் உள்ள முக்கிய கூறுகளில் ஒன்று, மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்பு திட்டத்தின் வழித்தடங்களுக்காக வானூர்தி விசை எரிபொருள் மீதான மதிப்புக்கூட்டு வரியினை 1 விழுக்காடு சலுகை வீதத்தில் விதிப்பது ஆகும். அதற்கிணங்க, மேற்சொன்ன நோக்கத்திற்காக, 2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86—ஆம் பிரிவின் (1)—ஆம் உட்பிரிவின் கீழ் அந்த சட்டத்தின் இரண்டாம் இணைப்புப் பட்டியலுக்கு திருத்தம் செய்ய அறிவிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. மேற்சொன்ன சட்டத்தின் 86—ஆம் பிரிவின் (2)—ஆம் உட்பிரிவின் கீழ், மேற்சொன்ன அறிவிக்கையை மாற்றமைவு செய்வதற்கு சட்டமன்ற பேரவையில் சட்டமுன்வடிவு ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு, மேற்சொன்ன நோக்கத்தினை எய்த விழைகிறது.

**கே.சி. வீரமணி,**
*வணிகவரித் துறை அமைச்சர்*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

2017–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 11–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2017.**

***1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்தெட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1. (1)** இந்தச்சட்டம், 2017 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வரும்.

12 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12–ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– தமிழ்நாடு சட்டம் 9/1982.

“(2). (1)ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு–

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும், உச்சநீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை;

(ii) அரசினால் நியமிக்கப்படுபவரும், அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத மாநில அரசின் ஓய்வுபெற்ற அல்லது பணிபுரியும் அலுவலராக இருப்பவருமான ஒருவரை;

(iii) ஆட்சிப் பேரவையினால் நியமிக்கப்படுபவரும் சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை; மற்றும்

(iv) ஆட்சிக்குழுவினரால் நியமிக்கப்படுபவர்களும் சிறந்த கல்வியாளர்களுமான இருவரைக் கொண்டது ஆகும்.

**விளக்கம்.–** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, “சிறந்த கல்வியாளர்” என்பது –

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக பணியாற்றிய அனுபவம் பெற்றுள்ள சிறந்த கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2–A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்–

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருத்தல் வேண்டும் ;

(ii) *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், துணைவேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித் தகுதிகள் மற்றும் அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

**(2–**B) வேந்தரால், அரசால், ஆட்சிப் பேரவையினால் மற்றும் ஆட்சிக்குழுவினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறு மாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

**(2–**C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்தோர்ப் பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

**(2–**D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். மேற்சொன்ன காலஅளவிற்குள் வேந்தருக்கு அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலுமான கால அவகாசம் அளிக்கலாம் அல்லது **(2)** ஆம் உட்பிரிவிற்கிணங்க மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.''

**நோக்க – காரண விளக்கவுரை.**

தற்போது, 1982–ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 9/1982), தேர்வுக்குழு உறுப்பினர்களுக்கும் துணைவேந்தருக்கும் தகுதி எதுவும் வகுத்துரைக்கப்படவில்லை. மேலும், துணைவேந்தரை அமர்த்துவதற்காகவும் துணைவேந்தராக அமர்த்துவதற்கான தகுந்த நபர்களின் தேர்ந்தோர்ப் பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்காகவும் தேர்வுக்குழுவினால் வேந்தருக்கு பரிந்துரை செய்வதற்குக் கால வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே, மேற்சொன்ன நோக்கங்களுக்காக, குறிப்பிட்ட வகைமுறைகளைச் செய்யும் பொருட்டு, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 9/1982 என்ற சட்டத்தைத் தகுந்த முறையில் திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**சேவூர் சோ. இராமச்சந்திரன்,**
*இந்து சமயம் மற்றும்*
*அறநிலையங்கள் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய விவரக் குறிப்பு.**

சட்டமுன்வடிவின் 2ஆம் கூறினால் புகுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள, 1982ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 12ஆம் பிரிவின் (2-A)(ii) உட்பிரிவானது அதனில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஆணை ஒன்றைப் பிறப்பிப்பதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி, தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**சேவூர் சோ. இராமச்சந்திரன்,**
*இந்து சமயம் மற்றும்*
*அறநிலையங்கள் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.